சி.ஆர்.எம்.பி 4215 /2023 பெயர்– ராஜோக்கியம்

எ.சா.1 நாள் 17.07.2025

**<u>சாட்சி மனுவில் பேரில் ஆஜர்படுத்தப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன் பேரில் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது வீட்டில் இருந்து வருகிறேன். இதற்கு முன்னர் அரியலூர் அரசு சிமெண்ட் ஆலையில் மெக்கானிக்காக பணிபுரிந்து, தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். எனக்கு இரண்டு முறை திருமணம் நடந்துள்ளது. முதல் மனைவி பெயர் சரோஜினி.இரண்டாவது மனைவி பெயர் சுதா என்றால் சரிதான். முதல் மனைவி சுத்தமல்லி கிராமத்தைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். முதல் மனைவிக்கும் எனக்கும் இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். அவர்கள் பெயர் ஆர்த்தி, இலக்கியா. அவர்கள் இருவரும் அரியலூர் அரசினர் மெட்ரிகுலேசன் பள்ளியில் படித்தார்கள். அவர்களை நான்தான் படிக்க வைத்தேன் என்றால் சரிதான். அவர்கள் 12 ம்வகுப்பு படித்து முடித்தவுடன், சென்னையில் பொறியியல் கல்லூரியில் படித்தார்கள் என்றால் சரிதான். ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஆர்த்தி என்பவருக்கு திருமணம் நடந்தது என்றால் சரிதான். அந்த திருமணத்திற்கு நான்தான் செலவு செய்து நடத்தி வைத்தேன் என்றால் மாப்பிள்ளை வீட்டாரே திருமணம்செலவுகளை பார்த்துக்கொள்கிறோம் என்று கூறியதால் அவர்களே செய்துக்கொண்டார்கள். நான் எதுவும் செய்யவில்லை. நான் ஒரு தகப்பனாராக எனது கடமைகளை திருமணத்தில் செய்து வைத்தேன். அந்த திருமணம் மண்டபத்தில் நடைபெற்றதா என்றால் சேலம் ஆத்தூரில் ஒரு கோவிலில் நடந்தது. திருமண வரவேற்பு மாப்பிள்ளை வீட்டாரே நடத்தினார்கள். நான் தற்போது முதல் தார மனைவியுடன் சேர்ந்து வாழ்கிறேன். நான் இரண்டாவது திருமணம் செய்துக்கொள்வது வரை, எனது முதல்தார மனைவிக்கு அனைத்து செலவுகளையும் நான்தான் செய்து வந்தேன். இரண்டாவது மகள் இலக்கியாவிற்கு மூன்று வருடங்களுக்கு முன்பு திருமணம்நடந்தது. அந்த திருமணத்திற்கு நான்தான் செலவு செய்து நடத்தி வைத்தேன் என்றால் மாப்பிள்ளை வீட்டாரே திருமணம்செலவுகளை பார்த்துக்கொள்கிறோம் என்று கூறியதால் அவர்களே செய்துக்கொண்டார்கள். நான் எந்த சீர்வரிசையும் செய்யவில்லை. இலக்கியாவிற்கும் தகப்பன் என்ற முறையில் அனைத்து கடமைகளையும் நான்தான் செய்தேன் என்றால்சரிதான். அந்த திருமணம் உடையார்பாளையத்தில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில்தான் நடைபெற்றது. எனது முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதுதான்

இரண்டாவது திருமணம் செய்துக்கொண்டேன் என்றால் சரிதான். எனது முதல் மனைவி சரோஜினியும், இரண்டாவது மனைவி சுதாவும் உறவினர்கள். எனது இரண்டாவது மனைவி சுதாவிற்கு முதல் மனைவி சரோஜினி அத்தை ஆவார். என் முதல் மனைவிக்கு ஆண் வாரிசு இல்லாத காரணத்தினால் இரண்டாவது திருமணத்தை பெரியோர்களால்பார்த்து, பின்பு நிச்சயிக்கப்பட்டது. அதில் தனக்கு விருப்பமில்லை என்று சாட்சி தாமாக முன்வந்து சொல்கிறார். இரண்டாவது மனைவிக்கும் எனக்கும் சுவாமிமலைகோவில்தான் திருமணம் நடைபெற்றது.

/உண்மை நகல்/

ஒம்/–S.தனலெட்சுமி.,பி.ஏ.எம்.எல்.,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1 (மு.கூ.பொ),
ஜெயங்கொண்டம்.